# நிலைபேறான எதிர்காலத்திற்கு வல்லமைபெற்ற பெண்கள்

## “வடமாகாணத்தில் பாதிப்புக்குள்ளாக்கப்பட்ட பெண்களின் தேவைகளை நிறைவேற்றக்கூடிய செயற்பாடுகளை இனம் காணலும் ஆவணப்படுத்தலும்”

# தேவைப்பகுப்பாய்வு-2016





சுகாதார, சுதேச மருத்துவ, சமூக சேவைகளும் புனர்வாழ்வும், நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் மற்றும் மகளிர் விவகார அமைச்சு,
வடக்கு மாகாணம்.

## கௌரவ அமைச்சர் அவர்களின் செய்தி.

எமது நாட்டின் பெண்கள் கல்விநிலை எமது அயல்நாடுகளுடன் ஒப்பிடும்போது கணிசமான அளவு முன்னேற்றகரமான நிலையிலேயே உள்ளனர். அவர்கள் தமது ஆற்றலை பல துறைகளிலும் வெளிப்படுத்தி நிற்பதை நாம் பெருமையுடன் நோக்கி நிற்கின்றோம்.

ஆனாலும் இன்றைய காலகட்டத்திலே எமது பெண்கள் குறிப்பாக வடக்குக் கிழக்கு மாகாணங்களில் பல்வேறுபட்ட வகைகளிலும் பாதிக்கப்பட்டவர்களாகவும் வன்முறைக்கு உட்படுத்தப்பட்டவர்களாகவும் இலகுவில் பாதிக்கப்படக்கூடியவர் களாயும் இருப்பதை நாம் உணரக்கூடியதாய் உள்ளது.

எமது மாகாணத்திலே யுத்தம் நடைபெற்ற காலத்திலும் சரி யுத்தத்திற்குப் பின்னரான காலப்பகுதியிலும் சரி, அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்கள் பலவகைப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களினூடாக பெண்களை வல்லமை பெற்றவர்களாக மாற்றுவதற்கும் அதனூடாக இந்த சமூகத்திலே அவர்கள் சுயமாக அடக்குமுறைகளிற்கு உட்படாதவர்களாக வாழ்வதற்கும் பல நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தியும், பல மில்லியன் ரூபா பணத்தை செலவிட்டும் குறிப்பிடத்தக்க அளவு மாற்றத்தை ஏற்படுத்தமுடியாமல் போயுள்ளது. நாட்டின் பிறபாகங்களுடன் ஒப்பிடும்போது எமது பெண்களின் நிலைமை வேறுபட்டதொன்றாகவே காணப்படுகின்றது.

ஆகவே எமது பெண்களின் இந்தநிலையை கருத்திற்கொண்டு அவர்கள் சமூகத்திலே அனைவரைப் போலவும் சுயகௌரவத்துடனும், பாதுகாப்புடனும், அனைத்து அடக்குமுறைகளிலும் இருந்து விடுபட்டவர்களாக, வல்லமை படைத்தவர்களாக வாழ்வதற்கு நாம் அனைவரும் ஒன்றுபட்டு உழைக்க வேண்டியவர்களாக உள்ளோம்.

எமது மாகாணத்திலே ''பெண்கள் விவகாரத் திணைக்களம்'' ஆளணியற்ற, நிதி ஒதுக்கீடு இல்லாத, பெயரளவிலான ஒரு திணைக்களமாகவே இன்றுவரை விளங்குவதுடன் ஆக்கபூர்வமான செயற்பாடுகளினூடாக பெண்கள் எதிர்கொள்ளும் சவால்களை இனம்கண்டு முறியடிப்பதற்கு சவாலாக உள்ளது.

இத்திணைக்களத்திற்கு ஆளணியையும், நிதி ஒதுக்கீட்டையும் பெறுவதற்கு எடுக்கப்படும் நடவடிக்கைக்கு மத்திய அரசின் கரிசனை எதிர்பார்க்கப்படுகிறது.

இவ்வாறான சூழ்நிலையிலே தான் எமது அமைச்சானது ''நிலைபேறான எதிர்காலத்திற்கு வல்லமை பெற்ற பெண்கள்'' எனும் மகுட வாசகத்துடன் இன்றைய தினம் வட மாகாணத்தில் பாதிப்புக்கு உள்ளாக்கப்பட்ட மற்றும் இலகுவில் பாதிப்பிற்குள்ளாக்கப்படக்கூடிய பெண்களின் தேவைகளை நிறைவேற்றக்கூடிய செயற்பாடுகளை 'இனம்காணலும் ஆவணப்படுத்தலும்' கலந்தாலோசனை அறிக்கையொன்றை தயாரிக்கும் பணியிலே ஈடுபட்டு அதனை நிறைவு செய்துள்ளது.

இவ்வறிக்கை தயாரிப்பிலே பெண் செயற்பாட்டாளர்கள், அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களினுடைய பிரதிநிதிகள் எனப் பெரும் எண்ணிக்கையானவர்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டு தங்களது பங்களிப்பை வழங்கியுள்ளார்கள். அவர்களுக்கு இச்சந்தர்ப்பத்திலே நன்றி கூறுவதுடன், இவ்வறிக்கையானது எமது மாகாணசபையினுடைய கௌரவ உறுப்பினர்கள் மற்றும் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களினுடைய ஆலோசனைகளும் பெறப்பட்டு முழுமைப்படுத்தப்படுவதுடன் எமது மாகாணத்தில் எதிர்காலத்திலே பெண்கள் அபிவிருத்தி தொடர்பான திட்டமிடலிற்கும் செயற்பாடுகளுக்கும் அடித்தளமாக அமையும் என நம்புகிறேன்.

நன்றி.

**வைத்தியகலாநிதி.பத்மநாதன் சத்தியலிங்கம். மா.ச. உ**
**அமைச்சர்,**
**சுகாதார, சுதேச மருத்துவ, சமூக சேவைகளும் புனர்வாழ்வும்,**
**நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் மற்றும்**
**மகளிர் விவகார அமைச்சு,**
**வடமாகாணம்.**

# முகவுரை

நீண்டகாலப் போரின் விளைவாகவும் மற்றும் பல சமூகக் காரணிகளாலும் எமது மாகாணத்தின் அனேகமான பெண்கள் பல இடர்களைச் சந்தித்து வருகின்றனர் என்பது யாவரும் அறிந்ததே.

இவ்வாறாகப் பாதிக்கப்பட்ட பெண்கள் முன்னேற்றம் தொடர்பாக அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் ஊடாக பல்வேறு விதமாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் அவற்றினூடாக எதிர்பார்க்கப்பட்ட அளவுக்குச் சாதகமான விளைவுகளை ஏற்படுத்தினவா என்பது கேள்விக்குரிய விடயமாகவுள்ளது.

இத்தகைய சூழ்நிலையில் இப்பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சனைகளை அவர்களது பங்குபற்றலுடனான கலந்துரையாடல்கள் மூலம் அறிந்து அவற்றுக்கான தீர்வுகளை முன்மொழியும் பொருட்டு வடமாகாண சுகாதார அமைச்சின் மகளிர் விவகாரப் பிரிவினால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

இந்த கலந்துரையாடல்களின் சாராம்சமாகப் பெறப்பட்ட சிபார்சுகளும் ஆலோசனைகளும் வடமாகாணத்தின் கொள்கை வகுப்பாளர்களுக்கு இன்று கையளிக்கப்படுகின்றன.

இவை பெண்கள் நலன் சார்ந்து நடைமுறைப்படுத்தப்படவுள்ள திட்டங்களை வரைவதில் கவனத்தில் கொள்ளப்படவேண்டியனவாகவுள்ளன.

இவ் அரிய முயற்சியில் எமக்கு ஆலோசனை வழங்கிய அனைத்து தரப்பினர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.


**சி.திருவாகரன்,**
**செயலாளர்,**
**சுகாதார, சுதேச மருத்துவ, சமூக சேவைகளும் புனர்வாழ்வும்,**
**நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் மற்றும்**
**மகளிர் விவகார அமைச்சு,**
**வடமாகாணம்.**

# உள்ளடக்கம்


| இல | விடயம் | பக்கம் |
|---|---|---|
| 01. | அறிமுகம் | 01 |
| 02. | பாதிப்புக்குள்ளாக்கப்பட்ட அல்லது இலகுவில் பாதிப்புக்கு உள்ளாக்கப்படக் கூடிய நிலையிலுள்ள பெண்கள் | 02 |
| 03. | அடையாளம் காணப்பட்ட பிரச்சனைகள் சவால்கள் | 04 |
| | 3.1. பெண்கள் மீதான வன்முறை | |
| | 3.2 பொருளாதார அழுத்தங்கள் | |
| | 3.3 பால்நிலை சமத்துவமின்மை | |
| | 3.4 அடிப்படைத்தேவைகள் பூர்த்தியாகாமை | |
| | 3.5 வாழ்க்கைத் தேர்ச்சி அறிவு போதாமை | |
| | 3.6 அரச கொள்கைகள் - சேவை வழங்குவதில் உள்ள இடைவெளிகள் | |
| 04. | சமூக கலாச்சார, பொருளாதார அரசியல், குடியியல் ரீதியாகப் பெண்கள் வல்லமைப்பட செய்ய வேண்டியவை. | 09 |
| | 4.1 நிலைபேறான வாழ்வாதாரம் - தங்கி வாழும் தன்மையை மாற்றுதல் | |
| | 4.2 பால்நிலை சமத்துவத்தை நோக்கிய சமூக வலுவூட்டல் | |
| | 4.3 அடிப்படைத்தேவைகள் பூர்த்தி செய்யப்படல் | |
| | 4.4 வாழ்க்கைத்திறன் கல்வி வழங்கப்படல் | |
| | 4.5 பாதிப்புக்குள்ளாக்கப்பட்ட பெண்களின் (சுயம்) வல்லமைப்படல் | |
| | 4.6 விசேட தேவையுடைய பெண்கள் | |
| | 4.7 சட்ட நீதியும் நீதி பெறல் | |
| 05. | மாகாண சபை எடுக்கவேண்டிய கொள்கை மற்றும் கட்டமைப்புசார் நிலைப்பாடுகள் | 18 |
| 06. | மாகாணசபையால் பொருத்துமுர்னுவுர்குளுக்குச் செய்யக்கூடிய பரிந்துரைகள் | 19 |
| | 6.1 மாகாணசபையால் மத்திய அரசுக்கு செய்யக்கூடிய பரிந்துரைகள் | |
| | 6.2 மாகாண சபை ஏனைய அமைப்புக்களுக்கு செய்யக்கூடிய பரிந்துரைகள் | |
| 07. | மாகாண சபையால் முன்னெடுக்கப்படக்கூடிய தரவுசேகரிப்புக்களும் ஆய்வுகளும். | 22 |
| | 7.1 தரவுத் தளங்கள் உருவாக்கல் பேணுதல் | |
| | 7.2 ஆய்வுகள் | |
| 08. | மாகாண சபையால் உருவாக்கப்படக் கூடிய அல்லது செயற்பட வைக்கக் கூடிய சேவைகள் | 23 |
| 09. | இக்கலந்தாலோசனையில் பங்குபற்றியோர் | 25 |

## 1. அறிமுகம்

இன்று பெண்கள் கல்வியில் மேம்பட்டுள்ளனர், பெண்கள் வெவ்வேறு வகையான தொழில்களில் ஈடுபட்டுள்ளனர். பெண்கள் பல தளங்களிலும் தமது ஆற்றல்களையும் திறன்களையும் வெளிப்படுத்திக் கொண்டிருக்கின்றனர். இது வடக்குக் - கிழக்கில் தமிழ் மக்கள் வாழும் பகுதி எல்லாவற்றிலும் நடந்துள்ளது. யுத்தகாலத்தில் பெண்கள் ஏற்கனவே செய்யாத பல பங்குபாத்திரங்களை வகித்திருக்கின்றனர், இவ்வளவும் நடந்திருந்தாலும் இன்னமும் பல பெண்கள் வன்முறைக்கு உட்படுத்தப்படுபவர்களாகவும், இலகுவில் பாதிக்கப்படக் கூடியவர்களாகவும், நிவாரணங்களுக்காக அலைகின்றவர்களாகவும், ஏமாற்றப்படுபவர்களாகவும் இருக்கின்றனர்.

சுனாமிக்குப் பின்னரும், யுத்தத்துக்குப் பின்னரும் எத்தனையோ அபிவிருத்தித் திட்டங்கள் வடமாகாணத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கின்றன. பெண்களை இலக்காகக் கொண்ட பெண்களை ‘வலுப்படுத்தும்’ இந்த அபிவிருத்தித் திட்டங்களுக்காகப் பல கோடிக்கணக்கான நிதி செலவிடப்பட்டுள்ளன. சமத்துவத்துக்கான விழிப்புணர்வுகள், தலைமைத்துவப் பயிற்சிகள் என ஏராளமான நிதியும், மனிதவளமும் செலவழிக்கப்பட்டும் அங்குமிங்குமாக சில பெண்களே வல்லமைப்பட்டிருக்கின்றார்களே ஒழிய பெண்கள் உரிமைகள் சார்ந்த ஒரு நிலையான பாரிய மாற்றங்கள் எதுவும் ஏற்படவில்லை. சமூக கலாச்சார பண்பாடு, பொருளாதார, அரசியல்ரீதியாக பாதிப்புக்குள்ளாக்கப்பட்ட நிலையிலேயே இன்னமும் நிறையப் பெண்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். தனிநபர்களாகப் பெண்கள் அதிகமான சவால்களையும் வன்முறைகளையும் எதிர்நோக்கிக் கொண்டிருக்கின்றனர். எனவே, பெண்கள் முழுமையாகத் தமது ஆளுமைகளை வெளிப்படுத்தி வல்லமை பெற்றவர்களாக வாழக்கூடிய மாற்றங்களை நோக்கி நகர்வதில் பல சவால்களும் தடைகளும் உள்ளன என்பதும் உறுதியாகின்றது.

இந்த வகையிலேயே வடக்கு மாகாணசபையின் சுகாதார சுதேச மருத்துவ சமூக சேவைகளும் புனர்வாழ்வும், நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் மற்றும் மகளிர் விவகார அமைச்சானது இந்தக் கலந்தாலோசனைச் செயற்பாட்டை முன்னெடுத்துள்ளது. பாதிப்புக்குள்ளாக்கப்பட்டவர்களாகவோ,இலகுவில் பாதிப்புக்குள்ளாக்கப்படக்கூடியவர்களாகவோ இல்லாமல், தங்கிவாழும் தன்மையற்ற, உரிமைகள் உறுதிப்படுத்தப்பட்ட பெண்களாக வாழ்வதற்குத் தடையாகவுள்ள எங்களது சமூகவிழுமியங்கள், மனப்பாங்குகள், வழக்காறுகள் சார்ந்த சவால்கள், அரச, அரசசார்பற்ற அபிவிருத்தித்திட்டங்களின் அணுகுமுறைகளில் இருக்கக்கூடிய பிரச்சனைகள், சேவை இடைவெளிகள் போன்றவற்றை அடையாளப்படுத்துவதே இந்தக் கலந்தாலோசனையின் நோக்கமாக அமைந்தது.

ஐந்து மாவட்டங்களிலும் பாதிப்புக்குள்ளாக்கப்பட்ட அல்லது இலகுவில் பாதிப்புக்குள்ளாக்கப் படக்கூடிய நிலையிலுள்ள பெண்கள், அவர்களது வல்லமைப்படலுக்குத் தடையாக அல்லது

சவாலாக உள்ள விடயங்கள் இந்தச்சவால்களைக்களைய சமூக மட்டத்தில், மாகாண மட்டத்தில் மற்றும் தேசியமட்டத்தில் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் என்பன அடையாளம் காணப்பட்டன.வெவ்வேறு மாவட்டங்களுக்கும் போரினால் ஏற்பட்ட தாக்கங்கள் சார்ந்து வேறுபாடுகளும், சமூக கலாச்சார பண்பாடு, பொருளாதார ரீதியான மற்றும் வளங்கள் சார்ந்த வேறுபாடுகள் இருப்பினும் பாதிப்புக்குள்ளாக்கப்பட்ட அல்லது இலகுவில் பாதிப்புக்குள்ளாக்கப்படக்கூடிய நிலையிலுள்ள பெண்களின் வகைப்பாட்டிலோ அவர்களுக்குள்ள சவால்களிலோ பாரிய வேறுபாடுகள் இருக்கவில்லை.

இந்த அறிக்கையானது ஒரு முறைமைசார் ஆய்வின் தொகுப்பல்ல. இது பாதிப்புக்குள்ளாக்கப் பட்ட பெண்களும் அவர்களுடன் வேலை செய்யும் அரச, அரசசார்பற்ற அமைப்புக்களின் பிரதிநிதிகளுமாக இணைந்து வளவாளர்களின் உதவியுடன் தயாரித்த கலந்தாலோசனை அறிக்கையாகும்.

## 2. பாதிப்புக்குள்ளாக்கப்பட்ட அல்லது இலகுவில் பாதிப்புக்கு உள்ளாக்கப்படக் கூடிய நிலையிலுள்ள பெண்கள்

- **தனியாக குடும்பத்தலைமைத்துவத்தைத் தாங்கும் பெண்கள்**
    - கணவன் இறந்த, கணவன் காணாமல் ஆக்கப்பட்ட, கணவன் கைதுசெய்யப்பட்டுத் தடுப்பிலோ, அல்லது சிறையிலோ உள்ள, கணவன் கைவிட்டுப்போன, நோயுற்ற நிலையிலுள்ள, திருமணமாகாத பெண்கள் (திருமணத்தால் சமூகம் வழங்கும் அந்தஸ்து இல்லாத பெண்கள்), தனித்து வாழும் பெண்கள் - தனித்து வாழும் வயோதிபப் பெண்கள்.
    - கணவன் வெளிநாட்டில் இருக்கும் பெண்கள் சிலரும் இந்த வகைப்பாட்டில் வருவர் எனவும் அபிப்பிராயங்கள் தெரிவிக்கப்பட்டன.
- **வன்முறைக்குட்படுத்தப்பட்ட, வன்முறைக்குட்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கும் பெண்கள்**
    - குடும்பத்தில் ஆரம்பித்து, வெளியில் போக்குவரத்தில், வேலைத்தளங்களில் என வெவ்வேறு தளங்களிலும் உடல் உள பாலியல், பொருளாதார ரீதியில் என வெவ்வேறு வடிவங்களிலும் நிகழ்த்தப்படும் வன்முறைகளால் பாதிக்கப்பட்டு மற்றும் இந்த வன்முறைகள் நிகழக்கூடிய பாதுகாப்பற்ற நிலைமைகளில் உள்ள பெண்கள்.

- **உடல் உளரீதியாக விசேட தேவையுள்ள பெண்கள்**
    - பிறப்பிலோ பின்னர் வேறு காரணங்களாலோ, யுத்தத்திலோ உடல்ரீதியாகவும் உள ரீதியாகவும் பாதிப்புக்குள்ளாக்கப்பட்டு வாழ்ந்து கொண்டிருக்கும் பெண்கள். இதில் உடல் அங்கங்கள் இழந்தோர், அங்கங்களின் செயற்பாடுகளில் குறையுள்ளோர் அல்லது செயற்பாடுகளை இழந்தோர், உடலுள் குண்டுகளின் பாகங்கள் உள்ளோர் போன்றோர் அடங்குவர். இவர்களில் பலர் சில விசேட ஏற்பாடுகள் செய்யப்பட்டால் தாமாகவே சுயாதீனமாக வாழக் கூடியவர்கள். இன்னும் சிலர் விசேட ஏற்பாடுகளுடன் ஏனையோரின் பராமரிப்பு உதவிகள் தேவைப்படுவோர். இன்னும் சிலர் வாழ்நாள் முழுவதும் முழுமையான உதவியும் பராமரிப்பும் தேவைப்படுவோர்.

- **முன்னாள் போராளிகள்**
    - நேரடியாக போராளிகளாகவோ வேறு வகையில் பங்களித்தவர்களாகவோ இருந்தவர்கள். இவர்கள் கைது செய்யப்பட்டு விடுதலை செய்யப்பட்டிருக்கலாம் அல்லது புனர்வாழ்வு முகாம்களுக்கு அனுப்பப்பட்டோ சிறைத்தண்டனை அனுபவித்தோ திரும்பியவர்களாக இருக்கலாம். இன்னமும் கண்காணிப்பின் கீழ் வாழ்ந்து கொண்டிருப்பவர்களாகவும் இருக்கலாம்.

- **பாதுகாப்பற்ற இளவயதுப் பெண்கள்**
    - பெற்றோரை இழந்த சிறுமிகள், இளம் பெண்கள், இளவயதுக் கர்ப்பத்துக்குள்ளான பெண்கள்.
- **பணிப்பெண்களாக வெளிநாடுகளுக்குச் செல்லும் பெண்கள்**

- **இராணுவத்தால் கைப்பற்றி மீள வழங்கப்பட்ட காணிகளில் குடியேறும் பெண்கள்**

- **திருமண அந்தஸ்து இல்லாத பெண்கள்**
    - போர் மற்றும் பல்வேறு காரணங்களால் இளவயதுத் திருமணத்துக்குட்பட்டவர்கள், கட்டாயத் திருமணத்துக்குள்ளானவர்கள், சட்டரீதியாகத் திருமணமாகாதவர்கள்

**குறிப்பு:** ஒரே பெண் மேற்கூறப்பட்ட ஒன்றுக்கு மேற்பட்ட வகைப்பாட்டுக்குள் வரக்கூடும். மேலும் பாதிக்கப்பட்ட அல்லது பாதிக்கப்படக்கூடிய நிலையிலிருத்தல் என்பது முழுமையாகப் போரால் மட்டும் நிகழ்ந்ததல்ல. அதற்குப்பின்னரும் பெண்கள் வல்லமைப்பட முடியாதிருப்பதற்கு சமூக மனப்பாங்குகள், அரச தனியார் சேவை வழங்குனர்களால் அவரவருக்குரிய விடயங்கள் தனித்துவமாகக் கையாளப்படாமை, ஏதுவான சூழலின்மை என்பன காரணமாகின்றன[1].

---

[1] பாதிப்புக்குள்ளாக்கப்பட்ட பெண்கள் மீதான பல்வகையான சவால்கள் குறிப்பாகப் பொருளாதார ரீதியிலான தாக்கங்கள் காரணமாக சில பெண்கள் பாலியல் தொழிலில் ஈடுபட நிர்ப்பந்திக்கப்படுகின்றனர் என்று கலந்தாலோசனையின் போது தெரிவிக்கப்பட்டது.

## 3. அடையாளம் காணப்பட்ட பிரச்சனைகள் சவால்கள்

பாதிப்புக்குள்ளாக்கப்பட்ட அல்லது இலகுவில் பாதிப்புக்குள்ளாக்கப்படக்கூடிய நிலையிலுள்ள பெண்கள் எதிர்கொள்ளும் பிரதான பிரச்சனைகளும், அவர்களது வல்லமைப்படலுக்குத் தடையாக அல்லது சவாலாக உள்ள விடயங்களும் அடையாளம் காணப்பட்டன. இங்கு குறிப்பிடப்பட்டுள்ள அநேகமான பிரச்சனைகள் பொதுவாக வட மாகாணத்திலுள்ள பெண்கள் அனைவரதும் உரிமைகளுக்கும் சவாலாக இருக்கின்ற போதிலும் அவர்களுக்குள்ள வேறு சாதகமான நிலைமைகள் காரணமாக அவர்களது பாதிக்கப்படும் தன்மையும் பாதிப்பும் குறைவாக உள்ளது.

### 3.1 பெண்கள் மீதான வன்முறை

குடும்ப வன்முறைகள், பாலியல் வன்முறைகள், பாலியல் சுரண்டல்கள், பாலியல் லஞ்சம், பாலியல் சேட்டைகள், தகாத உறவு, தற்கொலைக்குத் தூண்டுதல், தொலைபேசி, இன்ரநெட் ஊடான வன்முறைகள், அச்சுறுத்தல், களவு, கொலை என்பன பெண்களுக்கு எதிராக நிகழ்த்தப்படும் பிரதான வன்முறைகளாக அடையாளம் காணப்பட்டன.

அடையாளம் காணப்பட்ட சவால்களுள் பெண்களின் உடல் உளம் சார் சுயமரியாதையை மோசமாகப் பாதிக்கும் விடயமாகவும் பெண்களது வல்லமைப்படலுக்குப் பிரதானமான சவாலாகவும் அவர்களுக்கெதிரான வன்முறைகள் அடையாளம் காணப்பட்டன.

அதிலும் போரால் பாதிக்கப்பட்ட பெண்களது சமூக பொருளாதார அரசியல் ரீதியான மேம்பாட்டுக்குத் தடையாக அவர்கள் மீதான குடும்ப வன்முறைகள் 5 மாவட்டங்களிலும் அடையாளப்படுத்தப்பட்டன.

மேலும், அதிகரித்துவரும் பெண்கள் சிறுமிகள் மீதான பாலியல் வன்முறைகள் தொழில் இடங்களிலான பாலியல் சுரண்டல்கள், பாலியல் லஞ்சம், போக்குவரத்தில் இடம்பெறும் பாலியல் சேட்டைகள், சிறுமிகள் மீதான தகாதஉறவு, களவு கொலை சார்ந்த அச்சுறுத்தல்கள் போன்றனவும் குறிப்பிடப்பட்டன.

வன்முறைகள் காரணமாக உடல் உளப்பாதிப்புக்களுடன் பின்வரும் பாதிப்புக்கள் சுட்டிக் காட்டப்பட்டன.

- வன்முறைகளால் பாதிக்கப்பட்ட பெண்களுக்குச் சட்ட ரீதியான நீதி கிடைப்பதில் உள்ள தாமதங்கள், மற்றும் நீதி கிடைக்காமை - அதனால் அவர்கள் நீதி தேடி அலைவதும் அவர்களது மேம்பாடு சார்ந்த கல்வி பொருளாதார நடவடிக்கைகள் குழம்புவதும் தமக்குரிய இடங்களை விட்டு வேறு இடங்களில் சென்று வாழ வேண்டியிருப்பதும்.

- ○ வன்முறையாளர்கள் அடையாளம் காணப்பட்டு சரியான தண்டனை வழங்கப்படாமையால் பெண்கள் மத்தியில் நிலவும் அச்சம் அவர்களது வளர்ச்சிக்குத் தடையாக இருத்தல். உதாரணமாகக் குடும்பத் தலைமைத்துவத்தைத் தனித்துத் தாங்கும் பெண்கள் தமதும் தமது பெண் பிள்ளைகளினதும் பாதுகாப்புக் கருதித் துார இடங்களுக்கு வேலைகளுக்குப் போகாதிருத்தல்.

- ○ இளவயதுத் திருமணம், பலதார மணம், மது இலகுவில் கிடைத்தலும் அதிக மதுபாவனையும், சட்டவிரோத மதுபாவனை விற்பனையும் - உற்பத்தியும், போதைப்பொருள் பாவனை-விற்பனை போன்றன வன்முறைகளைத் தூண்டக்கூடிய சில காரணிகளாக அடையாளப்படுத்தப்பட்டன.

## 3.2 பொருளாதார அழுத்தங்கள்

வள இழப்பு, இழப்புக்களுக்குச் சரியான இழப்பீடுகள் வழங்கப்படாமை, நிலையான போதுமான வருமானமின்மை, வாழ்வாதாரத்தில் ஈடுபட முடியாத குடும்பப் பராமரிப்புப் பொறுப்புக்கள், பொருளாதாரச்சுரண்டல். தொழில் சுரண்டல் போன்றன பிரதானமான பொருளாதாரம் சார்ந்த சவால்களாக அடையாளம் காணப்பட்டன.

பாதிப்புக்குள்ளாக்கப்பட்ட அல்லது இலகுவில் பாதிப்புக்குள்ளாக்கப்படக் கூடிய நிலையிலுள்ள பெண்களை மேலும் பாதிப்புக்குள்ளாக்கும் ஒரு முக்கிய விடயமாகவும், அவர்களது மேம்பாட்டுக்குத் தடையாகவுள்ள ஒரு விடயமாகவும் பொருளாதாரப் பிரச்சனைகள் குறிப்பிடப்பட்டன.

இவர்கள் அநேகர் யுத்தத்தின் காரணமாக வருமானமீட்டும் அங்கத்தவர்களை, மூலதனங்களை, வளங்களை முழுமையாகவோ, பகுதியாகவோ இழந்தவர்கள். இந்த இழப்புக்களுக்கான சரியான இழப்பீடுகள் இல்லாமலேயே போருக்குப்பின்னரான வாழ்வைக் கட்டியெழுப்ப வேண்டிய நிர்ப்பந்தத்திலுள்ளனர். அத்துடன் நாட்டில் வாழ்க்கைப் செலவும், அதிகரித்துச் செல்வதால், தமதும் தமது குடும்பத்தினரதும் நாளாந்த வாழ்க்கைச் செலவுகளையே கொண்டு செல்ல முடியாதவர்களாகவும் உள்ளனர். இவர்களது இழப்புக்களை ஈடு செய்யக் கூடிய சரியான நிவாரணங்கள் பெருமபாலும் இன்னமும் வழங்கப்படவில்லை.

மேலும், இந்தப் பெண்கள் தமக்குத் தெரிந்த வாழ்வாதாரச் செயற்பாட்டை முன்னேற்றக் கூடியதான அல்லது புதிய நிலையான வாழ்வாதாரங்களைத் தொடங்கக் கூடியதாகப் பெரும்பாலான வாழ்வாதார அணுகுமுறைகள் இருப்பதில்லை. ஒருவரது குடும்பத்துக்கு மாத வருமானமாக எவ்வளவு தேவை என்பதைக் கணக்கிட்டு அதனைப் பெறக்கூடிய வகையில் வாழ்வாதாரத் திட்டங்கள் தயாரிக்கப்படுவதில்லை. அதனால் இந்தப் பெண்கள்

வாழ்வாதாரத் திட்டங்களில் உள்வாங்கப்பட்டபோதும் போதுமான நிலையான வருமானமின்றியே காணப்படுகின்றனர்.

அத்துடன் பால்நிலை காரணமாகப் பெண்கள் மீது எதிர்பார்க்கப்படும் பாரம்பரிய பங்கு பாத்திரங்களின் சுமையும் பெண்கள் நிலையான வருமானத்துக்குரிய வாழ்வாதாரச் செயற்பாடுகளைத் தெரிவு செய்வதில் சவாலாகின்றது. அதிலும் தனித்துக்குடும்பப் பொறுப்புக்களை வகிக்கும் பெண்களும், விசேட தேவையுள்ள அல்லது நோயுற்ற குடும்ப அங்கத்தவர்கள் உள்ள குடும்பங்களில் அதிக பராமரிப்பு வேலைகளைச் செய்ய வேண்டியுள்ள பெண்களுக்கும் இந்தப் பங்குபாத்திரங்கள் அதீத சவால்களாகின்றன.

வருமானப் பற்றாக்குறை காரணமாகப் பெண்கள் தம்மை சுரண்டலுக்குட்படுத்தக் கூடிய சம்பளப்பாகுபாடு, தொழிலாளர் நலநிதியம் போன்ற உரிமைகளற்ற, கூடிய நேர உடலுழைப்பைச் சுரண்டும் தனியார் கடைகள், தொழிற்சாலைகள் போன்றவற்றிலும் வெளிநாட்டுப் பணிப்பெண் வேலைகளையும் தெரிவு செய்கின்றனர்.

மேற்கூறப்பட்ட சுரண்டலின் இன்னுமொரு மோசமான வடிவமாக கிராமியப் பெண்களைக் குறி வைத்து நடாத்தப்படும் இலாப நோக்கிலான நிதிநிறுவனங்களின் நுண்கடன் திட்டங்களும் நியாயமற்ற வட்டிகளும் குறிப்பிடப்பட்டன. அநேகமாக வாழ்வாதாரத்துக்கென வழங்கப்படுவதாகக் கூறப்படும் இந்தக்கடன் திட்டங்கள் உண்மையில் வாழ்வாதாரத்தை வலுப்படுத்தும் தொடர் அனுசரணை எதையும் கொண்டிருப்பதில்லை. ஏற்கனவே பாதிப்புக்குள்ளாக்கப்பட்ட பெண்களை மேலும் பாதிப்புக்குள்ளாக்கும் வகையில் அவர்களிடம் மீதமுள்ள வளங்களையும் வட்டியாக அறவிடுவதுடன் அவர்களை மேலும் கடனாளிகளாகவும் வலுவற்றவர்களாகவும் ஆக்குகின்றன

## 3.3 பால்நிலை சமத்துவமின்மை:

பெண்கள் மீதான முழுச்சுமை, பாரபட்சமான சமூக விழுமியங்கள் நியமங்கள், தேசவழமை, சீதனம் போன்றன பால்நிலை சமத்துவமின்மையின் காரணமான பிரதானமான சவால்களாக அடையாளம் காணப்பட்டன.

எமது சமூகங்கள் கொண்டிருக்கும் பால்நிலைப்பாரபட்சங்களும் பெண்களது குறிப்பாக பாதிப்புக்குள்ளான பெண்களது முன்னேற்றத்துக்கு பாரிய சவாலாக அடையானம் காணப்பட்டன.

பெண்கள் எத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த வேலைகளில் இருந்தாலும் வாழ்வாதாரங்களில் ஈடுபட்டாலும் எமது சமூக நிலைப்பாடு காரணமாக வீடு – குடும்பப்பராமரிப்பு சார்ந்த ஊதியமற்ற வேலை அவர்களது கடமையாகவே பார்க்கப்படுகின்றது. இந்த இரட்டைச் சுமைகளுடன் போரால் பாதிப்புக்குள்ளாக்கப்பட்ட

பெண்களையும் கிராமியப் பெண்களையும் இலக்கு வைத்து நடாத்தப்படும் சமூக மட்ட அணிதிரட்டல்கள், குழுக்கள், கூட்டங்கள் போன்றவற்றில் பங்கு கொள்ளல் என்பது பெண்களுக்கு முழுச்சுமையாக அமைகின்றது. இதனால் இவர்களது முழுமையான சுயாதீனமான முன்னேற்றத்துக்காக அவர்கள் செலவிடக்கூடிய நேரமும், உழைப்பும் வருமானமும் இழக்கப்படுகின்றன.

பெண்களை ஒட்டுமொத்தமாக இரண்டாம்பட்சமாகவும் பாகுபாட்டுடனும் நடாத்தும் சமூக விழுமியங்களுடன் அவளுடைய அந்தஸ்தை ஒரு ஆணுடன் இணைத்தே பார்க்கும் நிலைப்பாடானது பெண்களுக்குள்ளேயே ஏற்றத்தாழ்வை ஏற்படுத்துகின்றது. கணவன் உள்ள பெண்களை விட கணவன் இறந்த கணவன் விட்டுவிட்டுப் போன, திருமணமேயாகாத என்ற அடிப்படையில் அவர்கள் பாரபட்சப்படுத்தப்படுவதுடன் அவர்களுக்கான சமூக அங்கீகாரமும் பல சந்தரப்பங்களில் மறுக்கப்படுகின்றன. கலாசார சமய ரீதியாகப்பல சந்தர்ப்பங்களில் இவர்கள் ஒதுக்கப்படுகின்றார்கள். அவர்களது கருத்துக்களுக்கும் தீர்மானங்களுக்கும் முக்கியத்துவமளிக்கப்படுவதில்லை.

இதே அடிப்படையிலேயே வடமாகாணத்துக்குரிய வழக்காறுகளின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட தேசவழமைச் சட்டமும் பெண்களது சொத்துரிமையைப் பாதிக்கின்றது. இது திருமணமான பெண் கணவனது அனுமதியின்றித் தனது சொத்துக்களை விற்கவோ கையாளவோ முடியாத நிலையைத் தோற்றுவித்துள்ளது. இத்தகைய நேரடியான பெண்கள் உரிமை மீறலானது இன்றைய யதார்த்த நிலையில் பெண்களுக்கு பல்வேறு வகையான சிக்கல்களைத் தோற்றுவித்துள்ளது. கணவன் இறந்ததை உறுதிப்படுத்த முடியாத பெண்கள், கணவன் காணாமல் போன பெண்கள் தமது சொத்துக்களை விற்கவோ, அதனை பிணையாக வைத்து கடன் எடுக்கவோ முடியாதநிலை காணப்படுகிறது.

இத்தகைய வழக்காறுகளில் ஒன்றாகத்தான் சீதன நடைமுறை உள்ளது. இது குடும்ப வன்முறைகளுக்கான ஒரு முக்கிய காரணியாகவும், வயதாகியும் திருமணமாகாது பல பெண்கள் தனித்து வாழ்வதற்கும் காரணியாகின்றது.

## 3.4 அடிப்படைத்தேவைகள் பூர்த்தியாகாமை

பெண்களினதும் அவர்களது குடும்பத்தவர்களதும் அடிப்படைத்தேவைகள் பூர்த்தியாகாததும் அவர்களை இலகுவில் பாதிப்புக்குள்ளாக்கக் கூடியவர்களாக ஆக்குகின்றது. பாதுகாப்பான வீடு, மலசலகூட வசதிகளின்மை, பாதுகாப்பான தூரத்துக்குள் நீர் வசதியின்மை போன்றன பெண்களது பாதுகாப்புக்கு சவாலாக அமைகின்றன. குடும்பத்துக்கான போதுமான உணவு கிடைக்காத சந்தர்ப்பங்களில் பெண்கள் பாதிப்புக்குள்ளாகக்கூடிய விடயங்களில் ஈடுபடவும் தங்கி வாழவும் வேண்டியேற்படுகின்றது. விசேட தேவையுள்ள பெண்கள் இந்த அடிப்படைத் தேவைகள் சேவைகள் சரியாகக் கிடைக்காதவிடத்து வேறொருவரைத் தங்கி வாழ நேர்கின்றது.

## 3.5 வாழ்க்கைத் தேர்ச்சியறிவு போதாமை

பாலியல் கல்வியின்மை மற்றும் ஈர்ப்பு, காதல், இணைந்து வாழ்தல், திருமணம் போன்றவற்றைப் பற்றிச் சரியாகப் புரிந்து கொள்ளாமை. பெண்கள் குறிப்பாக இளம் பெண்கள் சிறிது காலமே அறிமுகமான யாரையாவது காதல் என்று நினைத்து உறவு கொள்வதும் அவர் முதலே திருமணமானவரா இல்லையா என்பதை அறியாதிருப்பதும், திருமணச்சட்டங்கள், குடும்ப வன்முறை சார்ந்த சட்டங்கள் பற்றிய அறிவு இல்லாதிருப்பதும் அவர்களைப் பாதிப்புக்குள்ளாக்குகின்றன.

## 3.6 அரச கொள்கைகள் - சேவை வழங்குவதில் உள்ள இடைவெளிகள்

- **பால்நிலையை விளங்கிக் கொள்ளாமை, தேவையான இடங்களில் பெண் அலுவலகர்கள் இல்லாமை**

அரச திட்டங்கள் சேவைகள் பெண்களினது பிரச்சனைகளைச் சரியாகக் கருத்திற் கொண்டிருப்பதில்லை. வீட்டுத்திட்டங்கள் பாதிப்புக்குள்ளான பெண்களுக்கேற்றவை இல்லை. தனித்து குடும்பத்தை நடாத்தும் பெண்ணுக்கும் கணவன் மனைவியாக இணைந்து குடும்பத்தை நடாத்துவோருக்கும் பகுதி நிதியுதவியுடனான வீட்டுத்திட்டம் வழங்கும்போது பாதிப்புக்குள்ளான பெண்ணின் பல்சுமை கருத்திற்கெடுக்கப்படுவதில்லை. பெண்கள் உதவி நாடிப் போகும் இடங்கள் சேவைகள் பெண்களுக்கு நட்புரீதியானதாக இல்லை. அரச அலுவலகங்களில் பாதுகாப்பாகத் தமது பிரச்சனைகளைக் கதைக்கக் கூடிய இடங்கள் இன்மை. தமிழ் மொழி தெரிந்த பெண் பொலிசார் இன்மை, பெண் உளவள ஆலோசகர்கள் இன்மை போன்றன.

- **அரசு கொள்கை சட்ட - சட்ட நடைமுறை சார் சவால்கள்**

வன்முறைகளுக்குள்ளாக்கப்பட்ட பெண்களுக்கான நீதி கிடைப்பதில் பொலிஸ் நடவடிக்கைகளில் தொடங்கி நீதியான தீர்ப்புப் பெறுவது வரையான சவால்களையும் காலதாமதங்கள் பற்றியும் குறிப்பிடப்பட்டன.

அத்துடன் அரச கொள்கைகள் சார்ந்த பெண்களின் சொத்துரிமை மீறல் பற்றியும் பேசப்பட்டது. அதாவது, ஒப்பந்தக் காணிகள் ஆண்களின் பெயரில் வழங்கப்பட்டு அதன் வழியுரிமை ஆண்வழியாக நியமப்படுத்தப்பட்டிருப்பதன் காரணமான பாரபட்சங்கள், மற்றும் இராணுவம் கைப்பற்றி வைத்துள்ள பெண்களின் காணிகள் பற்றியும் குறிப்பிடப்பட்டது.

○ **உடல் - உள ரீதியான விசேட தேவைகள் உள்ளவர்களுக்கான சேவைகளிலுள்ள இடைவெளி**

விசேட தேவையுடையோரின் தேவைகள் ஒரேவிதமானவையல்ல, வெவ்வேறுபட்ட தேவையுடையவர்களும் தமது வாழ்வை முழுமையாக அல்லது இயலுமானவரை மற்றவர்களில் தங்கி வாழாது வாழ்வதற்குத் தேவையான சேவைகள் மேற்கட்டுமான வசதிகள் சார்ந்து பல இடைவெளிகள் அடையாளம் காணப்பட்டன. உதாரணமாக விசேட தேவையுடையோர் பிரதானமான உத்தியோகத்தர்களை அணுகும் வகையில் அலுவலகங்கள் அமைக்கப்படாமை, வெவ்வேறு விசேட தேவையுடையோர் போக்குவரத்து செய்யக்கூடியதாக வீதிகள் போக்குவரத்துத்துறையில் ஏற்பாடுகள் இன்மை, செவிப்புலனற்றோர், விழிப்புலனற்றோர் தகவலைப் பெறவும் தொடர்பாடலும் கூடிய வசதிகள் இன்மை, நட்பு ரீதியற்ற சேவையாளர்கள், நடமாட முடியாத நிலையிலுள்ள பெண்களை அணுகாத சேவைகள் போன்றன உதாரணங்களாகக் காட்டப்பட்டன.

## 4. சமூக, கலாசார, பொருளாதார அரசியல் குடியியல் ரீதியாகப் பெண்கள் வல்லமைப்படச் செய்ய வேண்டியவை

### 4.1 நிலைபேறான வாழ்வாதாரம் - தங்கி வாழும் தன்மையை மாற்றுதல்

பெண்களும் அவர்களது குடும்பத்தவர்களும் அடிப்படைத் தேவைகளைப்பூர்த்தி செய்து வாழக்கூடியதான பொருளாதார நிறைவைக் காண்பதற்குரிய, போதிய வருவாயைத் தரக்கூடிய பெண்களை மேலும் பாதிப்புக்குள்ளாக்காத, சுரண்டாத வாழ்வாதாரங்களை அடையாளம் காணல், அறிமுகப்படுத்தல், மேம்படுத்தல், மற்றும் பெண்களது வாழ்வாதார செயற்பாடுகளுக்கும் தொழிலுரிமைகளுக்கும் பொருளாதார மேம்பாட்டுக்கும் சவாலாக உள்ள ஏனைய விடயங்களில் மாற்றங்கள் ஏற்படுத்தல். பெண்களது வாழ்வாதார செயற்பாடுகளுக்கு ஊக்கமளிக்கக்கூடிய ஏதுவான சூழல் கட்டமைப்பு மாற்றங்களை உருவாக்கல்.

○ பெண்களைப் பொருளாதார ரீதியிலும் ஏனைய தளங்களிலும் வல்லமைப்படுத்தக்கூடிய நிலையான, போதிய வருவாய் தரக்கூடிய நீண்ட காலத்திட்டங்களை வகுத்து நடைமுறைப்படுத்தல். உதாரணமாக கூட்டான சிறுகைத்தொழில் நிலையங்கள், கூட்டுப்பண்ணைகள் உருவாக்கப்படல். பெண்களே பல்வேறு பங்கு பாத்திரங்களை வகிக்கக் கூடியதான (மூலதனம் தேடுவோர், உற்பத்தியாளர், சந்தைப்படுத்துனர், சேமிப்பாளர் போன்ற பாத்திரங்கள்) வாழ்வாதாரக்

கூட்டமைப்புக்களை உருவாக்கல். இவற்றின் மீதான சமூக பொறுப்புடைமை பங்களிப்பை உறுதிப்படுத்தல்.

- பெண்களின் கூட்டு பொருளாதார நடவடிக்கைகளுக்காக ஏற்கனவே அரச, அரச சார்பற்ற நிறுவனங்களால் அமைக்கப்பட்டு கைவிடப்பட்டுள்ள கட்டடங்களையும் பொருட்களையும் வட மாகாணசபை கவனத்தில் எடுத்து மீளமைத்தல், மீளச் செயற்படுதலை உறுதிப்படுத்தல்.

- பெண்கள் வாழ்வாதாரச் செயற்பாடுகளிலிருந்து இடைவிலகுவதற்கான காரணங்களை அடையாளங் கண்டு அவற்றை நீக்குதல், தொழில்நுட்ப அறிவையும் நீண்ட காலத் தொடர் அனுசரணையும் வழங்கல்.

- பெண்களைச் சுரண்டாத பாதிக்காத சந்தைப்படுத்தல் வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல், உள்ளூர் சந்தைகள், பெண்கள் சந்தைகள். ஒருங்கிணைந்த சந்தை வலையமைப்புக்கள், விவசாய விளைபொருட்களுக்கான விலை நிர்ணயம்[2] (நெல், மரக்கறி) போன்றவை.

- குறைந்தளவு மூலதனத்துடன் மாவட்டத்தில் காணப்படும் உள்ளீடுகளைப் பயன்படுத்தி உருவாக்கக்கூடிய உற்பத்திகளை ஊக்குவித்தல், சந்தைவாய்ப்பு ஏற்படுத்தல்.

- இறக்குமதியாகும் பொருட்களுக்கு மாற்றாகப் பெண்களின் உற்பத்திப் பொருட்களின் உள்ளூர்ப் பயன்பாட்டை ஊக்குவித்தல்.

- வெற்றிகரமாக இயங்கிக் கொண்டிருக்கும் தொழில் நிறுவனங்களுக்கான அனுபவச் சுற்றுலா ஏற்பாடு செய்தல்.

- பெண் போராளிகளுக்கு என்ன ஆற்றல்,திறன் உள்ளது என்பதை அடையாளப்படுத்தி (சிறுவயதிலிருந்தும், பின்னர் போராளிகளாக இருந்த பொழுதும் பெற்ற திறன்கள்) அதனை வலுப்படுத்தி அவரவருக்குரிய நிலையான வாழ்வாதாரத்தைப் பெற வகை செய்தல்.

- விசேட தேவையுள்ளோரின் ஆற்றல் திறன் அடையாளங் காணப்பட்டு அவரவரது வேலைகளையும் உள்வாங்கக் கூடியதாக வடிவமைக்கப்பட்ட கூட்டு அல்லது தனியான வாழ்வாதார செயற்பாடுகளை அறிமுகப்படுத்தல்.

- சுயஉதவிக் குழுக்களை அமைத்து சேமிப்புத் திட்டங்கள், சுழற்சி முறையிலான கடன் திட்டங்களை வலுப்படுத்தல்.

[2] இராணுவத்தினரால் அமைக்கப்படுள்ள பண்ணைகளில் விளையும் பொருட்களுடன் பெண்களது உற்பத்திப் பொருட்கள் போட்டியிட வேண்டியுள்ளதாக கலந்தாலோசனையில் குறிப்பிடப்பட்டது.

- இலகு கடன் வழங்கும் திட்டத்தை அவர்களின் தொழில் முயற்சிக்கு ஏற்ப வழங்க வேண்டும்.

- பெண்களுக்கான நிதி மூலங்கள் உருவாக்கப்படல் வேண்டும்.

- திறன்கள் இருந்தும் முதலீடு செய்வதற்குப் போதிய பணமில்லாத ஊக்கமாக உள்ள தனிநபர், குழுக்களை அடையாளம் கண்டு மானியமாகவோ, குறைந்தளவிலான வட்டி வீதத்துடனோ நிதி பெற வழி செய்தல்.

- யுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வாழ்வாதாரத்தை ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகள் வழங்குவதிலுள்ள தடையைக் கவனத்தில் எடுத்தல். தேவைக்கேற்ற வகையில் மாற்றுதல்.

- பெண்களது பால்நிலை சார் பங்கு பாத்திரங்கள் காரணமாக முழுநேரத் தொழிலில் ஈடுபட முடியாத பெண்களுக்குப் பகுதிநேர வேலைவாய்ப்புக்களை ஏற்படுத்தல், வழங்குதல்[3].

- குழந்தைகளுள்ள பெண்கள் வாழ்வாதார செயற்பாடுகளிலும் தொழில்களிலும் ஈடுபடுவதை இலகுபடுத்தவும் அவர்கள் முழுமனத்துடன் தமது ஆற்றல்களை வெளிப்படுத்தவும் ஏதுவாகப் பாதுகாப்பான குழந்தைப் பராமரிப்பு நிலையங்களை (சமூகமட்டங்களிலும், அரச, தனியார் திணைக்களங்களிலும் ஏற்படுத்தல்[4].

**தொகுப்பாளர்களின் கருத்து[5]:** வாழ்வாதாரத்திட்டங்களை அமுல்படுத்தும் போது பெண்களுக்கு முழுமையான வருமானமாக, குறை நிரப்பு வருமானமாக தேவை என்பதைத் தெளிவாக அறிதல், அறிமுகப்படுத்தும் திட்டம் அத்தகைய வருமானத்தை தரக்கூடிய திட்டம் என்பதை உறுதிப்படுத்தல். அந்த வாழ்வாதாரத்திட்டத்தில் ஈடுபடுவதன் மூலம் பெண்ணினது தங்கி வாழும் தன்மை குறைக்கப்படுவதையும், குடும்பத்தவராலோ அல்லது வாழ்வாதார செயற்பாட்டில் சம்பந்தப்பட்டவர்களாலோ வன்முறைகளுக்குட்படுத்தப்படாத நிலைமையையும் உறுதிப்படுத்தல்

[3] போரால் உடல் உள ரீதியாகப் பாதிக்கப்பட்ட பலர் உள்ள மாகாணம் என்பதால் அவர்களைப் பராமரிக்கும் பொறுப்பும், காணாமல் ஆக்கபட்டவர்களைத் தேடும், தடுப்பு முகாம்களில உள்ளவர்களைச் சென்று பார்க்கும் பொறுப்புக்கள் சாதாரண குடும்பப்பராமரிப்புப் பணிகளுக்கு மேலதிகமாகப் பெண்களிடமே அதிகம் உள்ளதால் அவர்களுக்கு இலகுதன்மையான வேலை நேரங்கள் தொழில் வழங்குனர்களால் அறிமுகப்படுத்தப்பட வேண்டும் என்பது குறிப்பிடப்பட்டது.

[4] எமது கலந்தாலோசனையில் பங்கு பற்றிய சமூக மட்டப் பெண்களும் அரச அரச சார்பற்ற நிறுவனப் பெண்களும் தமக்கு இந்தப்பிரச்சனையுள்ளதை உறுதிப்படுத்தினர். பிள்ளைகளின் பாதுகாப்பும் பராமரிப்பும் சார்ந்து இவ்வாறான கலந்தாலோசனைச் செயற்பாட்டின் மத்தியில் கூட அவர்கள் அடிக்கடி வெளியே செல்ல வேண்டியிருந்ததும் அதனால் செயற்பாட்டில் முழுமையாக ஈடுபட முடியாமல் இருந்ததும் அவதானிக்கப்பட்டது.

[5] இந்தக்கலந்தாலோசனைப் படிமுறையை வசதிப்படுத்தி பெறப்பட்ட கருத்துக்களை தொகுத்து இந்த அறிக்கையைத் தயாரித்தவர்கள்.

## 4.2 பால்நிலை சமத்துவத்தை நோக்கிய சமூக வலுவூட்டல்

பெண்களது அபிவிருத்திக்குச் சவாலாகவும் அச்சுறுத்தலாகவும் உள்ள, பெண்களை பாதிப்புக்களுக்கு உள்ளாக்கும் - பாதிப்புக்களுக்கு உள்ளேயே வைத்திருக்கும் சமூக கலாசாரச் சூழல்கள் மாற்றப்பட்டு பெண்கள் சம அந்தஸ்துள்ள மனிதர்களாக வாழும் சூழலை உருவாக்குதல்[6].

மாகாணசபையின் வழிகாட்டலில்,

சமூக மட்ட இளைஞர், சிறுவர் அமைப்புக்கள் சமய அமைப்புக்கள் ஊடாகவும், அரச சார்பற்ற அமைப்புக்களின் ஊடாகவும், ஊடகத்துறையின் பங்களிப்புடனும்,

- குடும்ப வன்முறையற்ற வாழ்வு, குடும்பக் கட்டமைப்பு, குடும்ப கடமை - பொறுப்புக்கள், குடும்பத்தில் சமையல் போன்ற பொறுப்புக்கள் பகிர்ந்து செய்தல் பற்றி சமூகங்களுக்கு குறிப்பாக ஆண்கள் இளைஞர்களுக்கு அறிவூட்டல்.
- புரிந்துணர்வுடனான வாழ்வு, ஆண் - பெண் உறவு நிலை ஆதிக்கமற்ற வன்முறைகளற்ற பாலியல் உறவுகள் பற்றி இளைஞர், யுவதிகள், குறிப்பாக ஆண்களுக்கு அறிவூட்டல் சிந்தனைத் தெளிவு ஏற்படுத்தல்.
- குடும்ப வன்முறைச் சட்டங்கள் தொடர்பான அறிவை இலகுவான முறையில் வழங்குதல்.
- பெண்களின் திருமண அந்தஸ்தை வைத்துக் காட்டப்படும் பாரபட்சம் சார்ந்த சமூக மனப்பாங்கு மாற்றம், இந்த அடிப்படையில் பாரபட்சம் காட்டாமை, பொது நிகழ்வுகளில் சம அந்தஸ்து அங்கீகாரம் வழங்கல், மறுமணத்துக்கான சமூக அங்கீகாரம் போன்ற மனப்பாங்கு மாற்றங்களுக்கான கலந்துரையாடல்கள் விழிப்புணர்வு நிகழ்வுகள் செய்தல்.
- முன்னாள் பெண் போராளிகள் பற்றிய மக்களின் கருத்துநிலை மாற்றத்துக்கான வேலைத்திட்டங்கள், குறிப்பாக அவர்கள் வகித்த மாற்றுப் பால்நிலைப்பாத்திரங்களை அங்கீகரித்தல். சமூக மாற்றத்தின் பிரதான பங்காளிகளாக அவர்களை ஏற்கச் செய்தல்.
- பால்நிலை சமத்துவம், இனப்பெருக்க சுகாதாரம், அடிப்படைச்சட்டங்கள் போன்ற விடயங்களை அறிவதற்கான ஏற்பாடுகள் பாடசாலைகளிலும், சமூக மட்ட சிகிச்சை நிலையங்களிலும், பிரதேச செயலகங்களிலும் செய்யப்படல்.
- சமூகங்களுக்குள் உள்ள சமூகப்பாதுகாப்பு பொறிமுறைகள் (கூட்டுக்குடும்பம் போன்ற) அடையாளம் காணப்பட்டு, வலுப்படுத்தப்படல்.

---

[6] பால்நிலை சமத்துவம் ஏற்படுத்தலை ஒரு சமூக மறுமலர்ச்சியாகப் பார்த்து உடன் செயற்பட வேண்டும் என்று கலந்தாலோசனையில் அழுத்தமாகத் தெரிவிக்கப்பட்டது.
;.

### 4.3 அடிப்படைத்தேவைகள் பூர்த்தி செய்யப்படல்

பெண்கள் பாதிப்புக்குள்ளாகாது வாழக்கூடியதும் பாதிப்புக்கு உள்ளானவர்கள் அதிலிருந்து மீண்டு வரக்கூடியதுமான பாதுகாப்பான வீடு, நீர், மலசலகூட வசதிகள் அவர்களுக்கு கிடைத்தல். அத்துடன் அடிப்படைச் சுகாதாரம் அடிப்படைக் கல்வி உறுதிப்படுத்தப்படல்.

- பாதிப்புக்குள்ளாக்கப்பட்ட அல்லது பாதிப்புக்குள்ளாகக் கூடிய நிலையிலுள்ள பெண்களுக்கு அவர்களது சொத்துரிமையை உறுதிப்படுத்தக்கூடியதான நிரந்தர வீடமைத்துக் கொடுத்தல்.

- சகல விசேட தேவையுடைய பெண்களதும் வீட்டுத்தேவையையும் நீர் மலசலகூட வசதிகளையும் அவரவரது பிரத்தியேக தேவைகளுக்கேற்ப வடிவமைத்துப் பூர்த்தி செய்தல்.

- அனைவருக்கும் போதிய உணவும் போசாக்கும் கிடைப்பதை உறுதிசெய்தல். அரச மாதாந்த உதவித்தொகையை அடிப்படைப் போசாக்குத் தேவையைப் பூர்த்திசெய்யும் வகையில் உயர்த்துதல்[7].

- பெண்களது அடிப்படைக்கல்வியை உறுதிப்படுத்தல். பாதிப்புக்களின் காரணமாகக் கல்வி இடைநிறுத்தப்பட்டால் அது தொடர்வதை உறுதிப்படுத்தல்.

- பெண்களது சுகாதாரம்: ஆரோக்கியம் சார்ந்த விடயங்களிலான விழிப்புணர்வையும் சேவைகள் சம்பந்தமான தகவல் வழங்கலையும் அதிகரித்தல்[8].

- சமூகமட்ட குடும்பநல உத்தியோகத்தர்களின் பற்றாக்குறையை நிவர்த்தி செய்தல் வேண்டும்.

### 4.4 வாழ்க்கைத்திறன் கல்வி வழங்கப்படல்

பெண்களும் ஆண்களும் தமது பாலியல் சார்நடத்தைகள் அவற்றின் விளைவுகள் பொறுப்புக்கள் பற்றி அறிந்திருத்தல், பெண்களைப் பாதிப்புக்குள்ளாக்கும் நடத்தைகள் பற்றியும் அவற்றுக்கெதிரான சட்டங்கள் பற்றியும் ஆண்கள் அறித்திருத்தல்.

---

[7] இந்தக் கலந்தாலோசனைகளில் பங்குபற்றிய பாதிப்புக்குள்ளாக்கப்பட்ட மற்றும் பெண்கள் அல்லது பாதிப்புக்குள்ளாகக்கூடிய நிலையிலுள்ள பெண்களுடனான தனிப்பட்ட கலந்துரையாடல்களின்போது அவர்கள் பலருக்கும் ஒரு நேர உணவே கிடைப்பதும் பலர் சில நாட்களை உணவின்றிக் கழிப்பதும் தெரிய வந்தது.

[8] வட மாகாணத்தில் மார்பகப் புற்றுநோய் அதிகரித்துள்ளதாகவும் இதை மாதாந்தம் பரிசோதிக்கும் விழிப்புணர்வு பெண்களிடம் இல்லையென்பதும் குறிப்பிடப்பட்டது.

- தொழில்நுட்பக் கல்லூரிகள், பயிற்சிக்கலாசாலைகள், பல்கலைகழகங்கள் போன்ற வளர்ந்தோர் கல்வி நிறுவனங்களின் பாடவிதானத்தில் பால்நிலைச் சமத்துவம், பாலியல் கல்வி, பெண்கள் உரிமைச் சட்டங்கள், சீடோ (CEDAW) உடன்படிக்கை போன்ற விடயங்கள் இணைக்கப்பட்டு அறிவூட்டப்படல்.

- மேற்படி விடயங்களை சரியான முறையில் கற்பிப்பதற்கான பயிற்சியை ஆசிரியர், ஆசிரிய ஆலோசகர்களுக்கு வழங்குதல்.

- இந்த விடயங்களில் விழிப்புணர்வு ஏற்படுத்தக் கூடிய மாற்றுத் திட்டங்களை தனியார் தொழில் மையங்களில் தொழிற்சாலைகளில் ஏற்படுத்தல்.

## 4.5 பாதிப்புக்குள்ளாக்கப்பட்ட பெண்களின் (சுயம்) வல்லமைப்படல்

பாதிப்புக்குள்ளாக்கப்பட்ட பாதிப்புக்குள்ளாக் கூடிய நிலையிலுள்ள பெண்கள் தம்மைப் புரிந்து கொள்ளவும் தமது பிரச்சனைகளைத் தாமே கையாளவும் கூடிய ஆலோசனைகள் கிடைக்கக் கூடியதாக இருத்தல்.

- பெண்களால் அடையாளப்படுத்தப்பட்ட வெவ்வேறு பிரச்சினைகளை உரிமை ரீதியில் புரிந்து கொண்டு வழிகாட்டக்கூடிய ஆலோசகர்கள் பல்வேறு சேவை வழங்கும் மட்டங்களிலும் இணைக்கப்படல். ஆலோசனை மையங்கள் அமைக்கப்படல்.

- பெண்களால் அடையாளப்படுத்தப்பட்ட வெவ்வேறு பிரச்சினைகளை உரிமை ரீதியில் புரிந்து கொள்ளக்கூடிய கையாளக்கூடிய உளவளத்துணையாளர்கள் பல்வேறு சேவை வழங்கும் மட்டங்களிலும் இணைக்கப்படல்.

- பல்வேறு சேவை வழங்கும் மட்டங்களிலும் உள்ள சேவை வழங்குனர்களுக்கு அடிப்படை உளவளப்பயிற்சி வழங்கல்.

## 4.6 விசேட தேவையுடைய பெண்கள்

விசேட தேவையுடைய பெண்களது பல்வேறுபட்ட வேறுபாடுகள் தேவைகள் வகைப்படுத்தப்பட்டு அவரவருக்குரிய தேவைகள் அடையப்படுவதையும், அவர்களும் அனைவரையும் போன்று உரிமைகளுடனான வாழ்வை வாழ்வதையும் உறுதிப்படுத்தல்.

**அணுகும் வசதி**

- மாகாண சபையினால் மேற்கொள்ளப்படும் மேற்கட்டுமானங்கள், கட்டமைப்புக்கள், அனைத்தும் வெவ்வேறு விசேட தேவையுடையோருக்கான நடமாட்டத்தை இலகுபடுத்தக்கூடியதாக இருக்க வேண்டும்.

- போக்குவரத்துத்துறை சேவையாளர்கள் விசேட தேவையுடைய மக்களின், குறிப்பாகப் பெண்களின் பாதுகாப்பான கௌரவமான நடமாட்டத்தை இலகுபடுத்தும் வகையில் பயிற்சியளிக்கப்பட்டு அறிவுறுத்தல்கள் வழங்கப்படல்.

- அரச அலுவலகங்களில் வெவ்வேறு விசேட தேவையுடையோர் அணுகக் கூடியதான பொதுத் தொடர்பு அதிகாரி ஒருவர் நியமிக்கப்படல், பொதுமக்கள் சந்திப்பு நாட்களில் சந்திப்புக்களை அலுவலகங்களின் கீழ் தளங்களிலும், வெவ்வேறு தொடர்பாடலுக்குரிய ஏற்பாடுகளுடனும் செய்தல். விழாக்களை ஒழுங்குபடுத்தும் போது வெவ்வேறு விசேட தேவையுடையோரின் பங்குபற்றலைக் கருத்திற் கொண்டு திட்டமிடப்படல்.

- இவர்களுக்கான பிரதான அரசமட்டப்பொதுச் சேவைகளை கிராம மட்டத்தில் பெற்றுக்கொள்ளக் கூடிய ஏற்பாடுகள் செய்யப்படல், விசேட நடமாடும் சேவைகளை ஏற்படுத்தல்.

- சகல விசேட தேவையுடைய பெண்களதும் வீட்டுத் தேவை அதனுள்ளான பிரத்தியேக வசதிகள், நீர், மலசலகூட வசதிகளுடன் பூர்த்தி செய்யப்படல்.

- மாவட்ட மட்டத்தில் விசேட தேவையுடையவர்களுக்காக நிலையத்தை நிறுவுதல். இது அவர்கள் ஆலோசனைகளை, சேவைகளைப் பெற்றுக்கொள்ளக்கூடிய அவர்களுக்கான இணைப்பாக்கம் செய்யப்படக்கூடிய மையமாக அமைய வேண்டும்.

**விசேட சேவைகள்**

- இலவச மருத்துவ சேவையை உறுதிப்படுத்தல். வைத்தியசாலைகளில் முன்னுரிமை வழங்கப்படலையும் கௌரவமாக நடாத்துதலையும் விசேட தேவைகளுக்குரிய வகையில் தொடர்பாடல்களையும் உறுதிப்படுத்தல்.

- விசேட தேவையுள்ள பெண்களுக்கு உதவக்கூடிய பயிற்சி பெற்ற பணியாளர்கள் அனைத்து இடங்களிலும் பணிக்கமர்த்தப்படல், குறிப்பாக சைகை மொழி தெரிந்த சுகாதாரப்பணியாளர்கள் கர்ப்பம், பிரசவ அறைகளிலும் வன்முறைகள் சார்ந்து

முறைப்பாடிடும் இடங்களிலும், உளவளத்துணை வழங்கப்படும் இடங்களிலும் பணிக்கமர்த்தப்படல்.

- பிரெய்ல் மொழிப்பாவனையைப் பரவலாக்கல். உதாரணமாக தாமாகவே வாக்களிக்கும் வசதிகள்.

- விசேட தேவைக்குரியோர் தத்தமக்குரிய தொடர்பாடல் மொழிகளைக் கற்றுக் கொள்ளவும் ஏற்கனவே கற்று இடைநிறுத்தியோர் தொடரவும் உரிய ஏற்பாடுகளைச் செய்தல்.

- விசேட தேவையுள்ளோரையும், பிள்ளைகளையும் குறிப்பாகத் தனித்து வாழும் விசேட தேவையுள்ள பெண்களையும் பராமரிக்கக்கூடிய தொண்டர்கள் உருவாக்கப்படல்.

- விசேட தேவையுள்ள பெண்களின் இனப்பெருக்க நலன் சார்ந்த விடயங்கள் பிரத்தியேக கவனத்துக்கு எடுக்கப்படல். மாதவிடாய் அணையாடைகள் இலவசமாக வழங்கப்படல்.

**தொழில் - வாழ்வாதாரம்**

- விசேட தேவையுள்ளவர்களுக்கான வேலை ஒதுக்கீட்டின் பிரகாரம் ஒவ்வொரு துறையிலும் குறைந்த பட்சம் 03 சதவீத வேலைவாய்ப்பு வழங்கப்பட்டிருப்பதை உறுதிப்படுத்தல். அதிக எண்ணிக்கையான விசேட தேவையுள்ளோர் இருக்கும் மாவட்டங்களில் இந்த வீதத்தைக் கூட்டல்.
.
- மாறுபட்ட வேலைவாய்ப்புக்களை உருவாக்குதல், வேலைவாய்ப்பினை ஒவ்வொருவரும் பெற்றுக் கொள்ளக்கூடிய விசேடமாக வடிவமைக்கப்பட்ட தொழிற்பட்டறைகள், பண்ணைகள் போன்றன செயற்படுத்தப்படல்.

- வாழ்க்கைக்குத் தேவையான முழுமையான வருமானத்தை ஈட்ட முடியாத ஒவ்வொரு வருக்கும் குறை நிரப்பு நிதி வழங்கப்படல்.

- வேலை செய்ய முடியாதவர்களுக்குப் போதுமான மாதாந்த கொடுப்பனவு வழங்கப்படல்.

- மேற்குறிப்பிட்ட கொடுப்பனவுகளுக்கான நிதியம் மாகாணசபையில் உருவாக்கப்படல்.

**விசேட தேவையுடையோர் பற்றிய சமூக மனப்பாங்கு மாற்றம்**

- விசேட தேவையுள்ளவர்களைக் குறிப்பாக பெண்களை கௌரவத்துடன் நடாத்தவும், அவர்களது உரிமைகளை மதிக்கவும் கூடிய சமூகத்துக்கான அறிவூட்டல்கள் சமூக மட்ட விழிப்புணர்வுகள் மற்றும் பாடசாலைகள் ஊடாக வழங்கப்படல். குறிப்பாக உளரீதியாகப் பாதிக்கப்பட்டுள்ளோரின் உரிமைகள் அவர்கள் கௌரவமாக நடாத்தப்படல் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தப்படல்.

- கிராம மட்ட பிரதேச மட்டத்தில் விசேடதேவையுடையோர் முன்னேற்ற சங்கங்கள் அமைக்கப்படல்.

## 4.7 சட்ட நீதியும் நீதிபெறல்

பாதிப்புக்குள்ளான உள்ளாகும் நிலையிலுள்ள பெண்கள் பாரபட்சமின்றி தமக்கான சட்ட நீதியைத் துரிதமாகப் பெற்றுக் கொள்ளல்.

- இழப்பீடுகளைப் பெற்றுக்கொள்வதற்கான உரிமையை உறுதிப்படுத்தல்.

- சட்டரீதியான ஆவணங்களைப் பெற்றுக்கொடுப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்தல். ஆவணங்களின் முக்கியத்துவம் தொடர்பான விழிப்புணர்வு வழங்கல்

- சட்ட ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலிலுள்ள பாரபட்சங்களைக் களைதல், தந்தை பெயர் இல்லாது பிறப்புச்சான்றிதழ் வழங்க முடியாது என்று நடைமுறை ரீதியாக உள்ள தடைகள், பெண்ணின் பெயரை முதற் பெயராகப்பாவிப்பதால் பிள்ளைகள் மீது காட்டப்படும் பாரபட்சங்களை நீக்குவதற்கான அறிவூட்டல்களை பாடசாலை அதிபர் ஆசிரியர்கள், கிராமசேவையாளர்கள் போன்றவர்களுக்கு வழங்குதல்[9].

- மேற்குறிப்பிட்ட விடயங்களுக்கான இலவச சட்ட ஆலோசனைகள் கிடைப்பதை உறுதிப்படுத்தல்.

- மாகாணசபையால் மாவட்ட மட்டங்களில் சட்ட - சட்ட நடைமுறை சார்ந்த ஆலோசனைப்பிரிவுகள் உருவாக்கப்படல்.

- கிராம மட்டங்களில் சட்டவழிகாட்டல் சேவை வழங்குவதற்கு அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு மாகாணசபை அறிவூட்டல்.

---

[9] தந்தையின் பெயர் குறிப்பிடப்படாத பிறப்பத்தாட்சிப்பத்திரம் உள்ள பிள்ளைகள் பாடசாலைகளில் சேர்க்கப்படும் போது காட்டப்படும் பாரபட்சம் பற்றி கலந்தாலோசனையில் குறிப்பிடப்பட்டது..

## 5. மாகாணசபை எடுக்கவேண்டிய கொள்கை மற்றும் கட்டமைப்புசார் நிலைப்பாடுகள்

பாதிப்புக்குள்ளாக்கப்பட்ட பாதிப்புக்குள்ளாகக்கூடிய நிலையிலுள்ள பெண்கள் வல்லமை பெற வடமாகாண சபை தனது கொள்கைளாகப் பிரகடனப்படுத்தப்பட வேண்டியவை:

- பால்நிலைச் சமத்துவத்துக்குரியதும் பெண்களை வல்லமைப்படுத்துவதற்கானதுமான கொள்கை வரைவு வடமாகாண சபையில் உருவாக்கப்படல் வேண்டும். குறிப்பாக CEDAW ஐ அடிப்படையாகக் கொண்டும் இந்தச் செயலமர்வுகளுக்கூடாகப் பெறப்பட்ட பரிந்துரைகளை அடிப்படையாகக் கொண்டும் வடமாகாணசபைக்குரிய கொள்கைகள் உருவாக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

- பெண்களின் விடயங்களைக் கையாள்வதற்கான தனி அலகு அல்லது அமைச்சு வடமாகாணசபையில் உருவாக்கப்படல். இவ் அலகிலுள்ள உத்தியோகத்தர்கள் மத்திய அரசு, அரச சார்பற்ற நிறுவனங்கள் என்பவற்றுடன் இணைந்து வேலைத்திட்டங்களை முன்னெடுத்தல்.

- மாகாணசபைக்குட்பட்ட பகுதிகளில் அனைத்து பெண்கள் உரிமை மீறல்களையும் கேட்கும் - நடவடிக்கை எடுக்கும் சுயாதீனக்குழு அமைக்கப்படல். இதில் பால்நிலை அடிப்படையிலான வன்முறைகளைக் கையாளும் பிரிவும் உள்ளடங்க வேண்டும். இந்தப்பிரிவானது பால்நிலை அடிப்படையிலான வன்முறைகளைக் கையாளும் ஏனைய அனைத்து அமைப்புக்கள் உடனுமான மாவட்ட-மாகாண இணைப்பாக்கப்பிரிவாக இருக்க வேண்டும்.

- தேவையான தீரமானம் எடுக்கும் பொறுப்புக்கள் பதவிகளுக்கு பெண்களது பங்களிப்பை அதிகரிக்கும் இடஒதுக்கீடுகள் செய்தல். (சமூக மட்ட அமைப்புக்களில் தொடங்கி மாகாணசபை வரையும்)

- மாகாண சபையில் அனைத்து சேவைப்பிரிவுகள், மாகாணசபைக்கு கீழ் வரும் தனியார் அமைப்புக்கள், கூட்டுத்தாபனங்கள் போன்றவற்றில் பால்நிலை சமத்துவத்துக்கான கொள்கைகள் உருவாக்கப்படல்.

- மாகாண சபையில் உள்ள உறுப்பினர்களுக்கு மற்றும் வடமாகாண சபைக்குட்பட்ட அனைத்து சேவைப்பிரிவுகளில் அனைத்து உறுப்பினர்கள் அலுவலகர்கள், மாகாணசபைக்கு கீழ்வரும் தனியார் அமைப்புக்கள், கூட்டுத்தாபனங்களின் உறுப்பினர்கள்,உத்தியோகத்தவர்களுக்கு பால்நிலை சமத்துவம் சார்ந்த அறிவூட்டல்கள் வழங்கப்படுவதை உறுதிப்படுத்தல்.

- வட மாகாணசபை பெண்களைப் பாரபட்சப்படுத்தும் சீதன நடைமுறைக்கு எதிரான தீர்மானம் கொண்டு வரல்.

- அரச, தனியார் திணைக்களங்கள், தொழிலகங்கள் போன்ற இடங்களில் வேலை செய்யும் பெண்களுக்கான பாதுகாப்பான குழந்தைப் பராமரிப்புக் கொள்கை உருவாக்கப்பட வேண்டும். அரச நியமத்தை விடக் குறைவான பிரசவ விடுமுறை வழங்கும் அமைப்புக்கள் அனைத்தும் சரியான விடுமுறையை வழங்கல்,வேலை செய்யும் தளத்தில் குழந்தையைப் பராமரிக்கும் தளத்தையும் ஏற்பாடுகளையும் உருவாக்கிக் கொடுத்தல்.

- வட மாகாணசபையின் சேவை மீளாய்வுகள் அனைத்திலும் பெண்கள் உரிமைகள் நோக்கிலும் பால்நிலை சமத்துவ நோக்கிலுமான மீளாய்வு உறுதிப்படுத்தப்படல் வேண்டும் (Gender audit).

- **தொகுப்பாளர்களினது கருத்து:** மாகாண சபையின் சகல மட்டங்களிலும் அதன் திணைக்களங்கள், அமைப்புக்கள் அனைத்திலும் உள்ளூர் உற்பத்திகளைக் குறிப்பாக பெண்களின் உள்ளூர் உற்பத்திகளைப் பாவிப்பதை கொள்கையாக்குதல்.

## 6. மாகாணசபையால் பொருத்தமான இடங்களுக்குச் செய்யக்கூடிய பரிந்துரைகள்

### 6.1 மாகாணசபையால் மத்திய அரசுக்கு செய்யக்கூடிய பரிந்துரைகள்.

- தேசவழமைச் சட்டம் மீள் பரிசீலனை செய்யப்பட்டு இலங்கையில் பொதுச் சட்டத்தின்கீழ் உள்ளவாறு பெண்களுக்கான சொத்துரிமையை சமத்துவமாகக் கிடைக்க வடமாகாண சபை நடவடிக்கை எடுத்தல்.

- போரால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு சரியான நிவாரணங்களும், ந்'டஈடும் கிடைக்கச் செய்தல்.

- வடமாகாணத்தில் உள்ள பிரதேச செயலகப்பிரிவுகளில் பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் நியமிக்கப்படாத செயசலகங்களுக்கு அந்த உத்தியோகத்தர்களை நியமிக்கச் செய்தல்.

- கிளிநொச்சியில் அமைக்கப்பட்ட ‘‘பெண்தலைமைத்துவக் குடும்பங்களுக்கும் போரால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்குமான தேசிய நிறுவனத்தினை’’ இயங்கச் செய்தல்.

- வேலைக்கான வயதெல்லை நிர்ணயத்தை அதிகரித்தல் - அரச தனியார் நிறுவனங்களில் பெண்களை இணைத்துக் கொள்ளும் வயதெல்லையை அதிகரிப்பதற்கான பரிந்துரைகள் செய்தல்[10].

- பெண்களது உரிமைகளை உறுதிப்படுத்தும் வகையில் தனியார் தொழில் தளங்கள், தொழிற்சாலைகள், வர்த்தகநிலையங்கள், நுண்கடன் வழங்கும் நிறுவனங்கள் மீதான நியமங்களை பெண்களின் உரிமைகளை உறுதிப்படுத்தும் வகையில் அரசுக்கு அழுத்தம் கொடுத்தல்.

- இலங்கையிலிருந்து மத்தியகிழக்கு நாடுகளுக்கு பணிப்பெண்களாகச் செல்லும் பெண்களின் பாதுகாப்பு, உயிர்வாழ்வதற்கான உரிமை, ஊதியச் சுரண்டல், போன்ற விடயங்களில் அரசு சரியான ஒப்பந்தங்களைச் செய்வதை உறுதிப்படுத்தல். அவர்களின் பணி ஒப்பந்தம் அவர்களது தாய் மொழியில் இருத்தல் பாதிக்கப்பட்டவர்களுக்கான நட்டஈடு போன்ற விடயங்களை இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் உறுதிப்படுத்த வேண்டும். இந்த விடயங்கள் பூரணமாக அமுல்படுத்தப்பட பரிந்துரை செய்தல்.

- பொலிஸ் நிலையங்களில் பெண்களின் முறைப்பாடுகளைக் கேட்டு பதியக்கூடிய மொழி தெரிந்த பெண் பொலிஸ் உத்தியோகத்தர்களை நியமிக்கப்பண்ணுதல். இல்லாவிடில் பெண் மொழிபெயர்ப்பாளர்களை நியமித்தல்.

**தொகுப்பாளர்கள் கருத்து:**

- பெண்களுக்கு எதிரான வன்முறைகளுக்கான நீதியைத் துரிதப்படுத்தக் கூடிய சிறப்பு நீதிமன்றம் போன்ற நடைமுறைகளுக்காக மத்திய அரசுக்கு அழுத்தம் கொடுத்தல். இதற்கான ஒரு விசேட துறைசார் நிபுணர் குழுவை மாகாண சபைக்குள் அமைத்தல்.

---

[10] பெண்கள் தற்போதுள்ள பால்நிலைப்பாகுபாடுகள் காரணமாக குடும்பப் பொறுப்பு, பிள்ளைப்பேறையும் போன்ற விடயங்களை தாண்டி வரவேண்டியுள்ளதாலும், யுத்தம் காரணமாகப் பல பெண்கள் இளவயதைக் கடந்த பின்னர் தான் வேலை தேடவேண்டிய நிலைமையிலுள்ளதாலும் பெண்கள் வேலையில் சேர்வதற்கான வயதெல்லையை அதிகரிக்க வேண்டும் என்பது குறிப்பிடப்பட்டது.

## 6.2 மாகாண சபை ஏனைய அமைப்புக்களுக்கு செய்யக்கூடிய பரிந்துரைகள்

பெண்களது உரிமைகளை உறுதிப்படுத்தும் வகையில் தனியார் தொழில் தளங்கள், தொழிற்சாலைகள், வர்த்தகநிலையங்கள், நுண்கடன் வழங்கும் நிறுவனங்கள் போன்றோருடன் பேச்சுவார்த்தைகள் நடாத்தல்.

- வன்முறைசார் நடவடிக்கை எடுக்கும் அரச அரசசார்பற்ற கட்டமைப்புக்களுடன் சரியான நீதிக்கான பேச்சுவார்த்தையும் இணைப்பாக்கமும் செய்தல்.

- வடமாகாணக் கல்வி அமைச்சும், சுகாதார அமைச்சும் இணைந்து பாலியல் கல்வி, இனப்பெருக்க சுகாதாரம் போன்ற விடயங்களைச் சரியான முறையில் பாடசாலைகளில் கற்பிப்பதற்கான முன்னெடுப்புக்களைச் செய்தல், ஏற்கனவே இது சம்பந்தமான முன்னெடுப்புக்கள் நிகழ்ந்திருந்தால் அவற்றைச் செயற்படுத்தல்.

- பெண்களுக்கு நுண்கடன் வழங்கும் அமைப்புக்கள் அரச கட்டமைப்புக்களுடன் தொடர்புகொண்டு வாழ்வாதாரத்துக்கான கடன் வழங்கும்போது அந்நிறுவனங்கள் தொழில்நுட்ப அறிவை வழங்குவதுடன், பெண்களது நிலையான வாழ்வாதாரத்துக்கான தொடர்கண்காணிப்பும் அனுசரணையும் வழங்குதல் வேண்டும், கடன் மீளச் செலுத்தும் தகைமையை கிராமசேவகர் மூலம் உறுதிப்படுத்த வேண்டும், கடன் மீளப்பெறுதலை கௌரவமான வன்முறைகளற்ற வழிகளில் செய்யப்படல், கடனின் வட்டிவீதம் குறைக்கப்படல் போன்றவற்றுக்கான அழுத்தம் கொடுத்தல்.

- வடமாகாணத்தில் அமைக்கப்பட்டுள்ள ஆடைத் தொழிற்சாலைகள், சிவில் சேவைப்பிரிவினரின் (CSD) பண்ணைகள், தனியார் கம்பனிகள், தனியார் நிறுவனங்கள், கடைகளில் தொழில் புரியும் பெண்களுக்கான வேலை நேர ஊதியம், வேலை நேரம், பாதுகாப்பு, சுகாதாரம், போன்ற விடயங்களில் இலங்கைத் தொழிலாளர் சட்டங்களில் உள்ள விடயங்கள் அமுல்படுத்தப்படுவதற்கான அழுத்தம் கொடுத்தல்.

## 7. மாகாணசபையினால் முன்னெடுக்கக் கூடிய தரவுசேகரிப்புக்களும் ஆய்வுகளும்

### 7.1 தரவுத் தளங்கள் உருவாக்கல் பேணுதல்

- விசேட தேவையுள்ளோர் அவர்களது வேறுபட்ட தேவைகள் திறன்கள் ஆற்றல்கள் போன்றவற்றுடனான தரவுத் தளம் அமைத்தல்.

- முன்னாள் போராளிகள், அவர்களது தற்போதைய நிலை, அவர்களது திறன்கள் ஆற்றல்கள் போன்றவற்றுடனான தரவுத் தளம் அமைத்தல்.

- பெண்களின் வாழ்வாதாரங்கள் சார்ந்த தரவுத்தளம் ஒன்றைப் பேணுதல். இதில் ஏற்கனவே பெண்களின் வாழ்வாதாரங்களுக்காக உருவாக்கப்பட்டு செயற்பட்டுக் கொண்டிருக்கும அல்லது கைவிடப்பட்டிருக்கும் தொழிற்சாலைகள், மையங்கள், இயங்காது வைத்திருக்கப்படும் இயந்திரங்கள் போன்ற விவரங்களும் பெண்களுக்கான வாழ்வாதாரமாக உருவாக்கப்பட்டு ஆண்களால் நடாத்தப்பட்டுக் கொண்டிருக்கும் வாழ்வாதார விடயங்களும் உள்ளடக்கப்பட வேண்டும்.

- பெண்களுக்கெதிரான வன்முறைகளைக் கையாளும், ஆவணப்படுத்தும் அமைப்புக்களுக்குடனும் இணைந்து புள்ளிவிவரங்களைத் தொகுத்தலும் காலத்துக்கு காலம் வெளியிடலும்.

- திருமணப்பதிவை அடையாள அட்டைகளின் அடிப்படையில் பதிவு செய்யும் தரவுத்தளம் அமைத்தல்[11].

### 7.2 ஆய்வுகள்

- பெண்களுக்கு எதிரான வன்முறைகள் அதிகரிப்பிற்கான காரணிகள் பற்றிய ஆய்வு.

- கூட்டுறவுச் செயற்பாடுகள் - கூட்டுப்பண்ணை முயற்சிகள் தோல்வியடைவதற்கான காரணிகளையும் சாதகமாக்கும் காரணிகளையும் (ஏற்கனவே நடாத்தப்பட்ட கூட்டுப்பண்ணை முயற்சிகளின் அடிப்படையில்) ஆராய்தல்.

- பெண்களைப் பாதிக்கும் நுண்கடன் திட்டங்கள் அவற்றின் தாக்கங்கள் பற்றிய செயற்பாட்டு ஆய்வு.

[11] பலதாரமணங்களைக் கண்டறிவதற்கும் தவிர்ப்பதற்கான முறைமையாக இது முன்வைக்கப்பட்டது.

**தொகுப்பாளர்களினது கருத்து**

- இதுவரை வடமாகாணத்தில் மேற்கொள்ளப்பட்ட பெண்களது உரிமைகள், பெண்களது வலுப்படுத்தல் போன்ற விடயங்களில் அரச சார்பற்ற நிறுவனங்கள் கல்வி சார் நிறுவனங்கள், தனிநபர்கள் செய்த ஆய்வுகள், கட்டுரைகளின் ஆவணச் சேகரிப்பும் சேமிப்பும் செய்யப்படல். இவை மாகாணசபையின் எதிர்காலத்திட்டங்களுக்குரிய தகவல்களைத் தரக் கூடியனவாக அமையும்.

## 8. மாகாண சபையால் உருவாக்கப்படக்கூடிய அல்லது செயற்பட வைக்கக்கூடிய சேவைகள்

- மோசமான வன்முறைக்குட்படுத்தப்படும் பெண்கள் அவர்களது வாழிடங்களில் வாழ்வதில் அச்சுறுத்தலை எதிர் கொள்ளும் பெண்களும் கௌரவமாகவும் பாதுகாப்பாகவும் தங்க வைக்கக் கூடிய பெண்கள் பாதுகாப்பு இல்லங்கள் (Safe House)அமைத்தல். ஏற்கனவே அமைக்கப்பட்டிருந்தால் இயங்கச் செய்தல்.

- வடமாகாணத்திலுள்ள பிரதான வைத்தியசாலைகளில் உளநலப்பிரிவுகளின் பொறுப்பில் ஐ.நா.நிறுவனங்களதோ, அரசசார்பற்ற நிறுவனங்களினதோ அனுசரணையுடன் அமைக்கப்பட்டு இயங்கிவரும் பால்நிலை அடிப்படையிலான வன்முறைகளுக்கு உட்பட்டவர்களுக்கு உதவும் பிரிவுகளை (GBV desks) மாகாணசபையின் கீழ் பொறுப்பெடுத்தல். அவற்றின் அனுபவமிக்க பணியாளர்களை மாகாணசபையின் கீழ் நிரந்தரமாக்குதல்.

- வேலைக்குச் செல்லும் பெண்கள் தங்கள் பிள்ளைகளைப் பாதுகாப்பாக விட்டுச் செல்வதற்கான சமூக மட்ட பராமரிப்பு இடங்களை (Day care centers) அமைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல். ஒரு மாதிரிப்பராமரிப்பு இல்லத்தை அமைத்து நடாத்தி அதிலிருந்து கற்றவற்றைக் கொண்டு சிறப்பான வகையில் பரவலாக்குதல்.

- பெண்களுக்கு அவர்களுக்கான சேவைகள் பற்றிய தகவல் அறியும் உரிமையை உறுதிப்படுத்தக்கூடிய திட்டமொன்று உருவாக்குதல். பெண்களுக்குத் தேவையான தகவல்களைக் கொண்ட கேள்விகளுக்குப் பதிலளிக்கக்கூடிய பகுதி[12].

---

[12] உதாரணமாக சமுர்த்தி பெறும் தகைமை எப்படித் தீர்மானிக்கப்படுகின்றது, ஏனைய சமுர்த்தி தீர்மானங்கள், அரச கொடுப்பனவுகளில் கழிக்கப்படும் பணம் ஏன் கழிக்கப்படுகின்றது, கடன் திட்டங்களும் வட்டி வீதங்களும் அது சார்ந்த உடன்பாடுகள் பற்றிய விவரங்கள் போன்றன.

- ○ உளரீதியாகப்பாதிக்கப்பட்டு தனிமையிலுள்ள, குடும்பப்பராமரிப்பு வழங்கப்பட முடியாத பெண்களுக்கான பராமரிப்பு இல்லம் உருவாக்கி நடாத்துதல்[13].

- ○ நிதியங்களை உருவாக்குதல் - மாகாணசபை ஒதுக்கீடுகள் மூலமும், மத நிறுவனங்கள் புலம்பெயர் உறவுகள் மூலமாகவும் நிதியங்களை உருவாக்குதல். இவை விசேட தேவையுடையோருக்கான மருத்துவ மற்றும் மாதாந்த நிதியுதவிகளுக்காகவும் வன்முறைக்குட்படுத்தப்படும் பெண்களுக்கான தீர்வுகள் நீதி பெறலுக்காகவும், பெண்களது வாழ்வாதார செயற்பாடுகளுக்கான மூலதனத்தை வழங்குவதற்கானதுமாக அமைக்கப்படல் வேண்டும்.

[13] உளரீதியாகப்பாதிக்கப்பட்டவர்களை சமூகங்களில் வைத்தே பராமரிக்க வேண்டும் என்பது மனநலசிகிச்சையில் முக்கியமானது எனினும் எமது சமூகத்தில் இத்தகைய பராமரிப்புப் பொறுப்புக்கள் பெரும்பாலும் பெண்களிடமே விடப்படுவதால் அது அவர்களது ஏற்கனவே உள்ள சுமையை அதிகரிக்கும் என்பதாலும் தேவையான சந்தர்ப்பங்களில் பராமரிப்பு இல்லங்கள் நடாத்தப்பட வேண்டும்.

### இக்கலந்தாலோசனையில் பங்குபற்றியோர்.

**அரச நிறுவனங்களின் பிரதிநிதிகள்**

1. கௌரவ சுகாதார அமைச்சர்.
2. சுகாதார அமைச்சின் செயலாளர்.
3. சுகாதார அமைச்சின் உதவிச் செயலாளர்கள்
4. பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர்
5. மாகாண சுதேச மருத்துவ சேவைகள் ஆணையாளர்
6. சமூக சேவைகள் திணைக்கள பணிப்பாளர்
7. நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்கள ஆணையாளர்
8. உதவிப் பிரதேச செயலாளர்
9. அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்
10. பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்
11. சமூக சேவை உத்தியோகத்தர்கள்
12. கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்
13. மேற்பார்வை குடும்பநல உத்தியோகத்தர்
14. வாழ்வின் எழுச்சி உத்தியோகத்தர்கள்
15. உளவளத்துணை உதவியாளர்கள்

**அரசசார்பற்ற நிறுவனங்கள்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | UNHCR | 18. | WIN | 35. | JSAC |
| 2. | IOM | 19. | CFCD | 36. | WHC |
| 3. | UNICEF | 20. | ANJALIYAKAM | 37. | FOSDOO |
| 4. | UNRCO | 21. | HHR | 38. | SANTHIHAM |
| 5. | LEADS | 22. | CARE | 39. | SANGAMI |
| 6. | SIRAKUKAL | 23. | SLAH | 40. | CDO |
| 7. | WVL | 24. | NPCODA | 41. | SOND |
| 8. | ZOA | 25. | HUDEC CARITHAS | 42. | WAN |
| 9. | OFFER CEYLON | 26. | OXFAM | 43. | RDF |
| 10. | UNHER | 27. | FRC | 44. | RWF |
| 11. | UNRCO | 28. | FORUT | 45. | SEED |
| 12. | WANT | 29. | SLF | 46. | LAC |
| 13. | UN HABITAL | 30. | WFP | 47. | TAF |
| 14. | IOM | 31. | M.W.F | 48. | CARITAS |
| 15. | VLUTHUKAL | 32. | TOM | | |
| 16. | CHRD | 33. | ORHAN | | |
| 17. | SANGAMAM | 34. | UNICEF | | |